னமுருகப்பெருமான் துணை

**மகான் போகமகரிஷி அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**10.08.2023**, வியாழக்கிழமை

1. மன்னவன் ஞானவான்களாக
மக்களை காத்தருள வேண்டி
அன்னவர்கள் ஞானம் அடைய
அவதாரம் எடுத்தருளும் அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது நள்ளி திங்கள்
இருபானை திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 25 ம் நாள், 10.08.2023, வியாழக்கிழமை)
இயம்பிடுவேன் அறிவுரை ஆசி
3. ஆசிதனை போகமகரிஷியானும்
அரங்கன் நோக்கம் கலியில்
வசமாக சித்திபெற உரைப்பேன்
வாசிவென்ற ஞானிகள் படையும்
4. படையும் துணை கொண்டருள
பண்பான மக்களாய் உலகோர்
தடையின்றி சீடர்களாக மாறி
தவராஜன் உன்னை தொடர
5. தொடரவே மக்களின் ஆற்றல்
தெளிந்த நீரோடையாகவே
தடையின்றி ஞான ஆற்றலாகி
தவராஜனை அகலாத வண்ணம்
6. வண்ணமுடன் தொடர் சேவை
வாரி வழங்கி தருமவழியும்
எண்ணம் மாறா உதவி நின்று
எல்லாம் குருவே என சரணாகதி

7. சரணாகதி கொண்டு வருக
சாற்றிட முழுமை நிலையும்
சரணாகதியாக தானே வந்து
சரணடைபவர்க்கு சித்தி உறுதி
8. உறுதி கொண்டு உடல் பொருள்
உள்ளம் மனம் ஆவி என
வருமுலகில் முழுமைசரணாகதியை
வைத்துவிட குருமேல் உலகோர்
9. உலகோர்க்கு சர்வ பாதுகாப்பு
உண்மை பொய் எதுவென
இலகுவாய்க் கண்டுத் தேறும்
எல்லா ஞானமும் கைகூடிட
10. கூடிட தன் பிறவி நோக்கம்
குருவின் அவதார நோக்கமென
தேடியே நிறைவு செய்கின்ற
தொண்டால் முழுமை தருகின்ற
11. தருகின்ற தனிப்பெருஞ் சக்தி
தணிகா சலனால் அடைந்து
முருகப் பெருமான் வெளிப்பட
முழுமை கொண்ட ஞான ஆட்சிபடைப்பர்

அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—